மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் அதுபற்றி அரசின் பரிசீலனையில் இல்லை. இனிமேல் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜமுனாமருத்தூர் லேம்ப் கூட்டுறவுச் சங்கம்.

* 4030—திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம். போளூர் வட்டம், ஜமுனாமருத்தூர் லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தில் பெரிய அளவில் மோசடி நடந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், போளூர் வட்டம் ஜமுனாமருத்தூரில் இயங்கிவரும் ஜவ்வாது மலை பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.7,57,339.95 அளவில் மோசடி நடந்துள்ளது. மோசடி செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, மாவட்டம் ஒன்றாக இருந்தபோது போட்ட கேள்வியாகும். இப்போது திருவண்ணாமலை சம்புவ ராயர் மாவட்டம், போளூர் வட்டத்திலே அந்த ஜமுனாமருத்தூர் லேம்ப் சொசைட்டி அடங்கியுள்ளது. மலைவாழ் மக்களுக்கு பெரும்பாலும் எல்லா வகையான காரியங்களும் இந்த சொசைட்டி யில்தான் நடைபெறவேண்டும். இங்கே பெரிய மோசடி நடந்து விட்ட காரணத்தினாலே சரியான அதிகாரிகள் கூட இல்லாமல் இந்த சொசைட்டியும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த மலைவாழ் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அந்த வழக்கைத் துரிதப்படுத்தவும் நல்ல அதிகாரிகளாக அங்கே நியமனம் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோசடி செய்த அதிகாரிகள் மீதும் அலுவலர்கள் மீதும் அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

1990 மே 11]

மேலும் சங்கம் சிறப்பாக நடைபெறுகின்ற அளவிற்குக் குறிப்பிட்ட அதிகாரிகளை நியமனம் செய்ய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? இப்போது அந்த வழக்கு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கே. சங்கரன் மற்றும் எழுத்தர் டி. கோவிந்தன், ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற வழக்குகள் எண். 282/88 மற்றும் 283/88 நீதிமன்ற விசாரணையில் உள்ளன. மேலும், அந்தத் தொகையும் அதன் மீதான வட்டியும் சேர்த்து ரூபாய் 1,52,951-க்கு தண்ட தீர்வை வழங்கி, வழக்கு பதிவாளர், திருவண்ணாமலை அவர்களால் தொடரப்பட்டு விசாரணையில் உள்ளது. இச்சங்கத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கால்நடைகள் வாங்க கொடுக்கப்பட்ட கடன்களை முறையாகப் பயன்படுத்தாமைக்கும் சிறு பொருட்கள், குத்தகை சேகரம் மற்றும் விற்பனையில் ஒழுங்கீனம் மற்றும் விற்பனை செய்வது குறித்து பெறப்பட்ட புகாரின்மீது குறித்த விசாரணைப்படி சட்டப் பிரிவு 81-ன் கீழ் பதிவாளரின் அலுவலர், தனிப் புலனாய்வுக் குழுவினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேலை நீக்கம் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-40 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குற்றத்தை அதிகாரிகள் செய்து இருக்கிறார்கள் என்று அவர்கள் பெயரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிகாரப் பற்றற்றவர்கள் யாராவது இதில் தொடர்புடையவர்களாக இருக்கிறார்களா? அப்படி இருந்தால் எந்தெந்த வகையில் இந்த ஊழல்கள் நடந்திருக்கின்றன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஒரு காலவரைக்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்து அவர்களைத் தண்டிக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரமான உரையை நான் அளிக்க விரும்புகிறேன். இருப்பு கையாடல் மற்றும் சரக்கு

கணக்குக் கொண்டு வராமல் செய்த வகையில் சங்கத்திற்கு இழப்பு ரூபாய் 98,959. திரு. ப. கோவிந்தன், எழுத்தர் சங்கத்தினுடைய கையிருப்புக் கையாடல் மற்றும் இடுபொருட்கள் இருப்புக் கையாடல் செய்த வகையில் சங்கத்திற்கு இழப்பு ரூபாய் 6,518. ரொக்கமாகக் கையாடல் செய்த வகையில் ரூபாய் 2,10,000. 1985-86ஆம் ஆண்டில் சரக்கு மோசடி செய்த வகையில் 2,61,710 ரூபாய். கடன் விற்பனையில் முறைகேடு காரணமாக 719 ரூபாய். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆட்டு மந்தைக் கடன் பட்டுவாடாவில் ஏற்பட்ட நிதி இழப்பு 1,47,550 ரூபாய். ஒப்படைக்காமல் செய்த வகையில் நிதி ரூபாயைக் கையாடல் செய்த வகையில் 31,382 ரூபாய். ஆக 7,57,338 ரூபாய் மோசடி செய்திருப்பதாகக் கணக்கில் வரப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரி கடும் நடவடிக்கை எடுத்து, அதற்குண்டான தண்டனை வழங்கவும் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலப்பு மணம் செய்தவர்களுக்கு அரசின் பரிசு.

*9619—திருமதி எஸ். பி. சற்குணம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967லிருந்து கலப்பு மணம் செய்த எத்தனை பேர் அரசின் பரிசினைப் பெற்றுள்ளார்கள் ?

(ஆ) கடந்த ஓராண்டில் மட்டும் இந்தப் பரிசு எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இதுவரையில் 3,926 பேர்கள் பயன் அடைந்து இருக்கிறார்கள்.

(ஆ) கடந்த ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 594 பேர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பரிசு வழங்குகிற திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த நாள்தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குத் தங்க மடல் பரிசு அளிக்கிற திட்டம் கொண்டுவரப்பட்டது. இப்போது பரிசு எந்த வகையில் வழங்கப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.